ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கதைமுடிவுக்கு வந்துவீட்டீர்கள் நாவலில் உளவியல் சிந்தனை

மா.மகேஸ்வரி
பதிவு எண்: 21212014022012, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி – 628002.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி-12,
தமிழ்நாடு, இந்தியா.

முனைவர்.ர.செல்வலதா,
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி – 628002.

ஆய்வுச்சுருக்கம்:

மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பு இலக்கியம் என்று கூறலாம். தற்கால இலக்கியமான நாவல்கள் வெளிப்படுத்துகின்றன. எழுத்தாளர் ஆர்.அபிலாஷ் சந்திரன் அவர்கள் எழுதிய கதைமுடிவுக்கு வந்துவிட்டீர்கள் நாவலில் கோகிலா என்ற எட்டுவயது சிறுமியின் பாலியல் வன்கொடுமைக்கு காரணமானவர்களின் குற்ற மனநிலை விசாரிப்பதாக அமைகிறது. குற்றம் செய்கின்ற மனத்தை ஆசிரியர் நாவலில் நீலநிறக்குறியீடு மூலம் விளக்குகிறார். இந்த நீலநிறம் என்பது கொடூர மனத்தின் அடையாளமாக முன்வைக்கிறார். இது ஒரு துப்பறியும் நாவல். துப்பறியும் நாவல் என்பது குற்றம் செய்தவர்களுக்கும், அதனை விசாரிப்பவர்களுக்கும் இடையிலான உறவு நிலையை நோக்கி நகரும். மாறாக இந்நாவல் குற்றத்தை செய்தவர்களுக்கும், அதை விசாரிப்பவர்களும் இடையிலான மனநிலையை ஆராய்கிறது. மேலும் குற்றவாளியை மட்டுமல்லாது குற்றவாளியின் உளவியலை அறிய முடிகிறது. குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களில் ஈடுபடுகின்றவர்களின் மனநிலையை ஆசிரியர் எடுத்துரைக்கிறார். குற்றம் சுமத்தப்பட்ட தமிழ்ச்செல்வனே ஒரு கட்டத்தில் தன்னுடைய குற்றத்தை கூட்டத்தின் முன்நிலையில் ஒப்புக்கொள்கிறார். கொலை சம்பந்தபட்ட ஆதாரங்களை சேகரிக்கும் போது முண்டாவின் முரண்பட்ட மனநிலையை ஆசிரியர் விசாரணையின் திருப்புமுனையாக அமையச் செய்துள்ளார். இதனை விசாரித்த ஜார்ஜ் என்பவரும் மனதளவில் பாதிக்கப்பட்டவர். நம் நம்பிக்கைகள், ஆசைகள், விகார எண்ணங்கள் மற்றொருவரை குற்றவாளி ஆக்குவதன் மூலம் வெளிப்படுகின்றன என்பதையும் அவர்களின் உளவியலையும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

முன்னுரை:

கதைமுடிவுக்கு வந்துவிட்டீர்கள் நாவலில் பாலியல் வன்கொடுமை பற்றிய செய்தியை ஆசிரியர் ஆர்.அபிலாஷ் சந்திரன் எடுத்துரைக்கிறார். பச்சிளம் குழந்தைகளை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தும் கொடூர மனத்தினை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார். நீலநிறக்குறியீட்டை நீலமனிதனின் கதை மூலமாகவும், தமிழ்ச்செல்வனை விசாரிக்கும் போது அவனது குற்ற மனமும், ஆசிரியர் வேலை செய்யும் போது கயல்விழியை பலாத்காரம் செய்ததையும் விளக்குகிறார். திரு.ஜார்ஜ் கொலை சம்பந்தமான ஆதாரங்களை சேகரிக்கும் போது

முண்டா என்ற முரண்பட்ட மனதையும் எடுத்துரைக்கிறார். கோகிலாவை கொன்ற குற்றவாளியைத் தேடும் போது கொலையுடன் தொடர்புடைய அனைவரும் ஒருவிதமான உளவியல் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை ஆசிரியர் கூறுகிறார்.

ஆய்வு அணுகுமுறை:

கதைமுடிவுக்கு வந்துவிட்டீர்கள் நாவலில் உளவியல் சிந்தனை என்னும் இக்கட்டுரையில் உளவியல் சார்ந்த கருத்துக்களை எடுத்துரைப்பதால் உளவியல் அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. மேலும் வகைப்படுத்தி, தரவுகளின் அடிப்படையில் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால், பகுப்பாய்வு அணுகுமுறை, விளக்கமுறை அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகள் கையாளப்பட்டுள்ளன.

பாலியல் வன்புணர்ச்சி:

ஆண், ஒரு பெண்ணுடன் கொள்ளும் பலவந்தமான உடலுறவை, கற்பைச் சூறையாடுதல், கற்பழிப்பு, பாலியல் பலாத்காரம், பாலியல் வன்முறை, வன்புணர்ச்சி, பாலியல் வல்லுறவு ஆகிய பெயர்களில் அழைக்கின்றனர். இச்சொற்கள் எப்படி வளர்ச்சி பெற்றதோ, அதைப்போன்று பாலியல் வல்லுறவிலும் ஆண்கள் புதிய புதிய உத்திகளைக் கையாளுகின்றனர். குறிப்பாக, ஆண்கள் பெரும்பாலும் பாலியல் வல்லுறவுக்குமுன் போதைப் பொருட்களை உட்கொள்வதும், பாலியல் வல்லுறவுக்குப் பின் பெண்களின் பிறப்புறுப்புகள், மார்பகங்களை சிதைப்பதும், அப்பெண் உயிரோடிருந்தால் தனக்கு தண்டனை கிடைத்துவிடும் எனக் கருதி அப்பெண்ணைக் கொலை செய்வதும் இயல்பாகிவிட்டது.

"மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்"[1] (குறள்.1289)

இயற்கையாய்த் துய்க்க இருக்கும் இவ்வுணர்வைச் சமூக ஒழுங்குகெடாமல் அளவோடிருக்க வேண்டும் என்றார் வள்ளுவர். பன்னாட்டு நிறுவனங்களின் வரவாலும், நுகர்வுக் கலாச்சாரத்தாலும் பார்க்கும் இடங்களெல்லாம் பாலியல் உணர்வைத் தூண்டும் படங்கள், விளம்பரங்கள், சுவரொட்டிகள், ஊடக வளர்ச்சிகள், உடலுறுப்புகள் தெரியும் கவர்ச்சியுடைகள், பாலியல் உணர்ச்சியைத் தூண்டும் உணவுகள் எனச் சிக்குண்டு சமூக ஒழுங்கே கெட்டுவிடுகிறது.

உளவியல் சார்ந்த பாலியல் விளக்கம்:

உலகில் அதிக விகிதத்தில் பாலியல் வன்முறைகள் நடக்கும் நாடு அமெரிக்கா என்று கூறப்படுகிறது. இந்தியாவில் இருப்பதைவிடப் பெண்ணுரிமை அதிகமுள்ள நாடு அமெரிக்கா. அதேபோல் திருட்டும், கொள்ளையும் அதிக விகித்தில் நடக்கும் நாடு அமெரிக்கா. அங்கு அறிவு வளர்ச்சி இருக்கிறது. உரிமைகள் பல இருக்கின்றன. பொருள்வளர்ச்சி இருக்கிறது. ஆனால் மனவளர்ச்சி இல்லை. அதனால் அங்கு ஒழுக்கமும் வளரவில்லை. அறமும் வளரவில்லை. இம்மனவளர்ச்சி இந்தியாவிலும் குன்றியே காணப்படுகிறது. அதனால்தான் பாலியல் வன்புணர்ச்சி தலைவிரித்து ஆடுகிறது. பேத்தியை வல்லுறவு கொண்ட தாத்தா, பெற்ற மகளை வன்புணர்வு செய்த தகப்பன், சித்தப்பன் மகளை வன்கொடுமை செய்த பெரியப்பன் மகன் என காமக் கொடூரன்களின் வெறியாட்டங்கள் தொடர்கின்றன நிகழ்கின்றன.

இதற்கு அடிப்படை காரணம் மனவளர்ச்சி தான். மன வளர்ச்சி என்பது சாரத்தில் மனதைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்திக் கொள்ளும் ஆற்றல்தான். பள்ளத்தை நோக்கி வெள்ளம் பாய்வதுபோல் மனம் எப்போதும் அற்ப மகிழ்ச்சிகளை நோக்கித் தாவுகிறது. மனநிறைவு ஒன்றுதான் மனதை கட்டுபடுத்துகிறது. இந்த மனநிறைவு மனிதநுகர்வில் ஏற்படும் பற்றாக்குறைக் காரணமாக ஏற்படுகிறது. அதில் ஒன்று பொருள் நுகர்வு. இரண்டு பாலியல் நுகர்வு. இவ்விரண்டையும் சார்ந்தே மனித மனநிலை பெரிதும் இயங்குகிறது.

ஒரு சிலரின் மிகைப் பொருள்குவிப்பால் பலரும் வறுமையுறுகின்றனர். அதில் சிலர் ஒழுக்கச் சிதைவுகளுக்குள்ளாகி திருடுவதிலும், கொள்ளையடிப்பதிலும் இறங்குகின்றனர்.

*அதேபோல் பாலியல் பற்றாக்குறைக்கும் – வறுமைக்கும் உள்ளானோரில் சிலர் ஒழுக்கச் சிதைவுகளுக்கு உள்ளாகி பெண்களை வல்லுறவு கொள்வதுடன் கொலையும் செய்கின்றனர்.*

*பாலியல் குற்றங்களை ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாக மட்டும் ஒற்றைப் பரிமாணத்தில் குறுக்கிவிடக் கூடாது. பெண்களிடமும் பாலியல் வெறி தூண்டிவிடப்படுகின்றது. அதற்காக பெண்கள் தங்களுக்குத் தொடர்பில்லாத ஆண்களை வல்லுறவு கொள்வதில்லை. பாலியல் வெறிக்கு உள்ளான பெண்களில் சிலர் மனக்கட்டுப்பாட்டை இழந்து வரம்பற்ற பாலுறவை நாடுகிறார்கள். அதற்கு வன்முறையை நாடாமல் ஆண்களைக் கவர்தல் என்ற உத்தியின் மூலம் கையாள்கிறார்கள்.*

*நீல நிறக்குறியீடு:*

*ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொரு விதமாக கதாபாத்திரங்களைச் சித்தரிக்கும் ஆசிரியர்கள் மத்தியில் ஆர். ஆபிலாஷ் அவர்கள் "கதை முடிவுக்கு வந்து விட்டீர்கள்" என்ற நாவலில் வரும் 'நீலமனிதன்' என்ற பாத்திரம் பாலியல் குற்றங்களை செய்யும் குற்ற மனதின் மனதை நீல நிறத்தோடு ஒப்பீடுகிறார். இதனை,*

*"நீல ஒளியில் இருந்து ஏழடிக்கு மேல் உயரமுள்ள ஒரு வாலிபன் இறங்கினான்"[2](க.மு.வ.ப.10). இங்கு ஏழ் அடி என்பது கொடூரத்தின் குறியீடாகும். ஆண்களை இயல்பாக ஆறடி உயரம் என்று கூறுவர். இவர்கள் சற்றும் வேறுபட்ட குரூரமனத்தை சேர்ந்தவர்கள் என்பதால் ஏழடிஉயரம் என்றும் அவனை "நீலநிறம்" என்றும் கூறுகிறார். பார்கடலை கடைந்த போது அதிலிருந்து வெளிபட்ட வாசுசிப் பாம்பின் விஷம் நீலநிறம் தான். பாம்பின் விஷம் நீல நிறமாக தோன்றுவது போல, இப்படிப்பட்ட ஆணாதிக்க சமூகத்தின் குறியீடாக நீல நிற மனிதனைக் கதைக்குள் கொடுத்திருக்கிறார் ஆசிரியர்,*

*"அவளது உடல்மொழி*
*அறிந்த நீங்கள்*
*இதயத்தின் குரலைக்*
*கேட்டதே இல்லை*
*ஆழகான கண்கள்*
*அழாது என்பதில்லை*
*தயவு செய்து*
*கண்ணீரைக் கடந்து*
*வதந்திகளைப் பரப்பாதீர்கள்"[3]*

*என்றும்,*

*"ஆயிரமாயிரம்*
*குழந்தைக் கொலைகளை*
*மூடி மறைக்க*
*போபாலின்*
*காற்றுக்கு மட்டுமல்;ல*
*பீகாரின்*
*கங்கைக்கும் தெரியும்"[4]*

*சிறார்கள் என்று கூட பாராமல் சிரமம் கொடுக்கும் ஆண்களுக்கு தெரியவில்லை பெண் என்னும் பேராழிக்குள் சிக்கி சீரழியப்போவது ஆண்கள் என்று ஆசிரியர் பெண்ணை கங்கைக்கு ஒப்பிட்டுச் சொல்கிறார்.*

*இன்றைய சமூகத்தில் பாதுகாப்பு என்பது இல்லை. பெண்கள் மட்டுமல்ல பெண் குழந்தைகளும் இன்று அதிக அளவில் பாதுகாப்பற்ற தன்மையை உணர்கின்றனர்.*

*மனஉணர்வும் – வன்புணர்ச்சியும்:*

*திரு.ஜார்ஜ் தமிழ்ச்செல்வன் பற்றிய ஆதாரங்களை சேகரிக்கும் போது அவன் ஆசிரியராக பணியாற்றிய இடத்தில் கயல்விழி என்ற பெண்ணை பலாத்காரம் செய்ததாக தெரியவருகிறது. கயல்விழியை சந்தித்து பேசும் போது தனக்கு சிறு வயதிலே இப்படிபட்ட அனுபவம்*

நடந்ததாகவும், தன் சித்தப்பாவால் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாகவும் ஜார்ஜிடம் கூறுகிறாள். இதனை,

"வீட்டில் நான் மட்டும் தனியாய் இருந்தேன். என்னை அறியாமல் அசந்து தூங்கிவிட்டேன். சட்டென என் மீது யாரோ பாயும் பார உணர்வு. கழுத்து இறுக மூச்சுவிடத் திணறினேன். சித்தப்பா என் மேல் அமர்ந்து கழுத்தை இறுக்கினார். செத்துவிடுவோமோ என பயந்தேன். கழுத்தை நெரித்தபடியே அதைச் செய்தார். மரண பயம் என்னை அந்த வலியை மறக்கச் செய்தது. பிறகு பல முறை என்னை அது போல் செய்தார். வெளியே சொன்னால் என் அப்பாவையும் அம்மாவையும் கொன்று விடுவதாய் மிரட்டினார்."[5] (க.மு.வ.ப.48).

என்று கயல்விழி கூறுகிறாள். கயல்விழி சிறுவயதாக இருக்கும்போது அவள் செய்யும் சேட்டைக்கு சித்தப்பாவால் தண்டிக்கப்பட்;டாள். அவளது அம்மாவும், பாட்டியும் கயல்விழியின் நல்லதுக்காகத்தான் என்று ஒன்றுமே கூறாமல் இருப்பர்.

இதனை,

"…..இந்தா… இந்த ஒடம்பு தான வேணும். என்ன வேணும்னாலும் செஞ்சிக்கிட்டுப்போ… செஞ்சி முடிச்சதும் எங்கயாச்சும் தூக்கிக் கொண்டு போட்டுப் பொதச்சிரு. உம் உனக்கு ஒஞ்சொகந்தான் பெரிசு… "[6]

பொன்னீலனின் கரிசல் என்னும் புதினத்தில் வயது முதிர்ந்த கிழவன், தன் பண்ணையில் வேலை செய்யும் இளம் பெண்ணைப் பாலியல் ரீதியில் துன்புறுத்துகிறான் என்பதை தன்னுடைய நாவலில் ஆசிரியர் கூறுகிறார்.

கயல்விழியின் உடம்பு அவளுடையது இல்லை என்பதை சித்தப்பா நம்பினார். அதனால் அவளை அவ்வாறு கொடுமை செய்தார். ஒருசிலரின் மனநிலை பிறரைக் காயப்படுத்துவதன் மூலம் சரியாகிவிடும் என்பதாக நம்புகிறார்கள். சித்தப்பாவின் மனமும் பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அதனை சரிசெய்யும் மருந்தாக கயல்விழியின் உடம்பை அவளின் விருப்பம் இல்லாமல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கி எடுக்கிறார் என்பதையும் ஆசிரியர் கூறுகிறார்.

கயல்விழியின் உணர்வு தூண்டல்:

கதைமுடிவுக்கு வந்துவிட்டீர்கள் நாவலில் வரும் தமிழ்ச்செல்வன் வழக்கில் சம்மந்தப்பட்ட கயல்விழியின் உணர்வு தூண்டல் சிறுவயதிலேயே சித்தப்பாவால் ஏற்பட்டது என்றும் அதனால் தமிழ்ச்செல்வன் தன்னை நெருங்கும் போது தடுக்கவில்லை என கயல்விழி கூறுகிறாள். சிறு வயதிலேயே பாலியல் ரீதியான வன்கொடுமைகளை மனதாலும், உடம்பாலும் அனுபவித்ததாள் தமிழ்ச்செல்வன் அவளை நெருங்கும்போது கயல்விழியின் பாலிய உணர்வு தூண்டப்பட்டதால், அவள் கத்தவோ, பிறரை கூப்பிடவோ இல்லை. அவளுக்குள் ஏற்பட்ட இச்சை உணர்விற்கு காரணம் சித்தபாவின் அடக்குமுறைதான்.

இதனை,

"என் பார்வை அப்பகுதியைத் தொட்டு மீண்டது. என் மனம் எப்படி நடக்கப் போவதை சரியாய் ஊகித்தது என எனக்கு இன்றும் வியப்பு. அவர் அருகில் வந்து மிக மிருதுவாய் என்னைத் தன் கைகளில் அள்ளி எடுத்தார். அதிர்ச்சியில் நான் எதிர்க்கவோ அழவோ இல்லை"[7] (க.மு.வ.ப.46).

கயல்விழி பள்ளிபருவத்தில் அவளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியர் தமிழ்ச் செல்வனால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டால், அவள் அதனை எதிர்க்காததற்கு காரணம் வீட்டில் சித்தப்பாவால் அதே நிலைமைக்கு உட்பட்டதால் அவளால் அதை தடுக்க முடியவில்லை.

"சார் என்னை நெருங்கும் போது சித்தப்பாவின் நினைவுகள் ஒட்டுமொத்தமாய் எழுந்து என்னை ஆக்கிரமிக்கும். உடம்பு கல் போல் உறைந்து போகும். அவர் என்னைப் பல இடங்களில் அப்படி செய்திருக்கிறார். வகுப்பில் கூட ஆசிரியர் வராத வகுப்பில் என்னைத் தவிர வேறு மாணவர்கள் இருந்தால் ஏதாவது காரணம் சொல்லி அவர்களை வெளியே அனுப்பி விட்டு என் பக்கத்தில் வந்து உட்கார்வார்"[8] (க.மு.வ.ப.49).

கயல்விழியின் உணர்வு தூண்டப்பட்டதை நாவல் வழி ஆசிரியர் ஆர். ஆபிலாஷ் பதிவு செய்கிறார்.

"விரிந்து கிடந்த கூந்தலை முடிந்து
கலைந்துபோன ஆடைகளை
அணிவதற்காய் நானும்
மெதுவாக எழுந்தபோது
இவள் அவனோட விரும்பித்தான்... ..."[9]

ஒரு பெண்ணை எதிரியின் ராணுவ முகாமைச் சேர்ந்த ஒரு எதிரி கெடுத்துவிட்டால் அது கற்பிழந்தது ஆகாது என்கிறார்கள். அதே செயலை இனத்தவனே செய்துவிட்டால் அதைக் கற்பழிப்பு என்கிறீர்கள். இது நியாயமா என்கிறார் பெண்கவி ரங்கா. வேற்று ராணுவனிடம் பெண் விரும்பியே சென்றாலும் கற்பிழந்தவளாக கருதப்படவில்லை. அதே தன் இன ராணுவனிடம் விருப்பமில்லாமல் ஒரு பெண்ணின் கற்பு சூறையாடப்பட்டால் அவள் கற்பிழந்தவளா? ஏன கவிஞர் தம் கவிதை வரிகளில் சாடுகிறார்.

கவிஞரின் வரிகளுக்கு ஏற்ப இந்த சமூகத்தில் பாலியல் வல்லுறவில் ஈடுபடும் ஒருசில ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக, அடக்குமுறைக்கு உட்படுத்தி பலவந்தமாக அவர்களின் கற்பை சூறையாடுகிறார்கள். கயல்விழியின் கற்பும் தமிழ்ச்செல்வனால் சூறையாடப்பட்டபோது அவளுக்கு சிறுவயதிலே ஏற்பட்ட பாலியல் வன்கொடுமையால் உணர்வு தூண்டப்பட்ட கயல்விழி அதனை எதிர்க்கவோ, ஏற்கவோ முடியாத நிலையில் இருந்தாள் என்று நாவலாசிரியர் அபிலாஷ் கூறுகிறார்.

இன்றைய சமுதாயத்தில் கயல்விழி போன்ற ஒருசில பெண்குழந்தைகளுக்கு ஏற்படும் பாலியல் தொல்லைகள் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தி அவர்களின் உணர்வு தூண்டப்பட்டு உளவியல் ரீதியாக பாதிப்படைகிறார்கள்.

தமிழ்ச்செல்வனின் குற்றமனம்:

ஒவ்வொரு பெண் குழந்தையும் பிறப்பிலிருந்தே பலவிதமான இன்னல்களில் வளர்க்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் முதல் ஆணாக தன் அப்பாவைத்தான் காண்கிறாள். இச்சமூகத்தில் அதுவே கேள்விக்குள்ளாக்கப்பட்டுவிட்டது. கதை முடிவுக்கு வந்துவிட்டீர்கள் நாவலில் கோகிலாவின் தந்தை தமிழ்ச்செல்வன் மகளின் பாலியல் வன் கொடுலைக்கு காரணம் என்று உரைக்கும் காட்சியை ஆசிரியர்.

"தமிழ்ச்செல்வன் சொன்னார். நான் இக்கொலை சம்பந்தப்பட்ட ஆதாரங்களை அழித்ததாகவும் குற்றவாளிகளை மறைப்பதாகவும் திரு. ஜார்ஜ் கருதுகிறார். ஆனால் அக்கொலையை நானே செய்தேன் என உங்கள் முன்னிலையில் ஒப்புக்கொள்ள விரும்புகிறேன். ஆம், என் மகள் கோகிலாவை நானேதான் கொன்றேன்"[10](க.மு.வ.ப.80).

ஒரு கட்டத்தில் தமிழ்ச்செல்வனே தன்னுடைய குற்றமனதின் காரணமாக ஒப்புக்கொள்கிறான். ஆணாதிக்கம், அரசியல் காழ்ப்புணர்ச்சி போன்றவற்றின் காரணமாக தன் மகளை தானே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கி அரசியல் கூட்டம் சேர்ந்து கொன்றுவிடுகிறார்கள்.

"பெரும் கனவுகளுடன்
தொட்டிலில்
உறங்கிக் கிடக்கும்
பச்சிளங் குழந்தையை
யாரும் அறியா நேரம் பார்த்து
சுற்றித் திரியும் வெறிநாய்கள்
கவ்வி எடுத்து
குப்பைத் தொட்டியில் இட்டு
அவசரஅவசரமாக
குதறித் தின்கின்றன... ...!!
... ... ... ... ... ... ... ... ...
அந்த சின்னஞ் சிறு
குழந்தை நெஞ்சத்தின்

தொண்டை அறுபட்ட கதறல்கள்
எனக்கு இன்னமும் கேட்கின்றது.....!!"[11]

என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து பச்சிளம் குழந்தைக்கு இச்சமூகத்தில் பாதுகாப்பு இல்லை. தொட்டில் குழந்தையைக் கூட விட்டு வைப்பதில்லை. காரணம் அவளும் பெண் என்பதற்காக? கோகிலா தமிழ்ச்செல்வனின் வளர்ப்பு மகள். அவளை தமிழ்ச்செல்வன் தன் மகளாக எண்ணியிருந்தால் இதை செய்திருக்கமாட்டான். தமிழ்ச்செல்வன் மனதில் ஏற்பட்ட காம காயத்திற்கு தந்தை – மகள் என்ற உறவுநிலை தெரியாது. அவள் உடம்பும் அதனால் ஏற்பட்ட இச்சை உணர்வும்தான் காரணம் என்கிறார் ஆசிரியர்.

முண்டாவின் முரண்பட்ட மனஉணர்வு:

கதையின் ஒரு பக்கம் கோகிலாவை கொன்ற குற்றவாளியைத் தேடும் போது விசாரணையில் 'முண்டா' என்னும் கதைப்பாத்திரத்தின் வழியே இளம்தளிர்கள் கருகிக் கொண்டு இருப்பதை ஆசிரியர் அபிலாஷ் கூறுகிறார், "என் கை பட்டாலே எந்த குழந்தையும் சத்தம் எழுப்பாமல் வரும். என் முகராசி அப்படி விளக்கை நோக்கி விட்டில் வரும்போது விளக்கு என்ன செய்ய முடியும் சார்..... பொதுவாய் முதலில் கழுத்தைத் திருகி விடுவேன். அப்போது தான் தொந்தரவில்லாமல் நான் இயங்க முடியும்"[12](க.மு.வ.ப.88-89) என்றும்,

"இந்த இளந்தளிர்கள் அவர்கள் எனக்காகப் படைக்கபட்டவர்கள் என் விரல் நுனியில் வந்தமரும் பட்டாம்பூச்சிகள்..... ஒரு வளர்ந்த பெண்ணை எப்படி விரலில் அமரும் பட்டாம்பூச்சி எனச் சொல்ல முடியும்? விரல் ஒடிந்து விடாதா?"[13](க.மு.வ.ப.89-90)

என்று முண்டா என்னும் கதைப்பாத்திரம் இளம் தளிர்களின் சிறகை முறிக்கும் வன்ம உருவமாக ஆண்கள் காட்சி தருவதை ஆசிரியர் விளக்குகிறார். முண்டாவிற்கு இரண்டு மனைவிகள் ஐந்து குழந்தை. முதல் மனைவி இறந்துவிட்டாள். இரண்டாவது மனைவி நண்பருடன் சென்றுவிட்டாள். அதனால் அவன் குழந்தைகளிடம் தன் மன வேட்கையைத் தீர்த்துக் கொள்கிறான் என்று ஆசிரியர் உரைக்கிறார்.

முடிவுரை:

ஆண், பெண்ணை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவதற்கு பலகாரணம் கூறப்படுகிறது. அதில் ஒன்று மனநோய் உள்ளவன் என்பது. மனநோய் உள்ளவனுக்கு இது மட்டும் எப்படி சரியாக நடக்கிறது? மனநோய் என்று கூறுவது இத்தவறிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான வழிமுறை அவ்வளவுதான். தாத்தா, அப்பா இன்னும் பலஉறவுமுறைகள் குழந்தைகளை பாழ்படுத்துவதற்கு ஆணின் அடக்கமுடியாத கட்டுப்படுத்த இயலாத இச்சையே அடிப்படைக் காரணமாக அமைகிறது என்பதை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது. இதற்கு ஆசிரியர் கூறும் விளக்கம் கூட ஏற்புடையதாக இல்லை என்பதும் உணரமுடிகிறது.

மேற்கோள்கள்:


1. பரிமேலழகர் உரை, திருக்குறள், பா.எண் - 1289, முதற்பதிப்பு, கௌரா பதிப்பகம், சென்னை.
2. ஆர்.அபிலாஷ் சந்திரன், கதைமுடிவுக்கு வந்துவிட்டீர்கள், ப.எ – 10, முதல் பதிப்பு – ஏப்ரல் 2016, உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை – 600 018.
3. கவிஞர் பழநிபாரதி, முனைவர். ம. சரோஜா, ப – 45.
4. பொன்னீலன், கரிசல், ப.எ – 146.
5. இளந்தேவன், இளந்தேவன் கவிதைகள், ப.எ – 150, முதற்பதிப்பு, கண்ணப்பன் அறக்கட்டளை, 22, வெள்ளாளர் தெரு, கோடம்பாக்கம், சென்னை – 600 024.
6. அடையாளம் தெரியாத மிருகங்கள், https://eluthu.com>kavithai


********* ********* ********** ********* ********* ********** ********** **********